Website : www.kamakoti.org.
email : kanchimutt@gmail.com

☎ : 044-27222115
Acts : 044-27224236
Fax : 044-27224305

உ

II Sri Chandramouleeswaraya Nama: ||

Sri Sankara Bhaghavadpadacharya Paramparagatha Moolamnaya Sarvajnapeeta

His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi

# JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL

## Srimatam Samsthanam

**No. 1, Salai Street, KANCHEEPURAM - 631 502.**

Date : ..................................

**மருத்3வ்ருதே4 நமஸ்துப்4யம் ஸர்வ-மங்க3ள-காரிணி**

**மோக்ஷாதி3ப2லதே3 தே3வி ஸர்வ-பாவன-பாவனி**

**காவேரீ-புஷ்கரம் த4ன்யம் ஸர்வ-பாப-ப்ரணாஶனம்**

**தன்வதாம் மங்க3ளம் பூ4யாத் சந்த்3ரமௌளி-க்ருபேக்ஷணாத்**

பாரதநாட்டில் ஒவ்வொரு துகளும் புனிதமானவை. நதிகளும் மலைகளும் இயற்கையின் ஒவ்வொரு பகுதியும் பகவதம்சமாகவே பார்க்கப்பெறுகின்றன. நதிகள் அனைத்தும் மோக்ஷாதி பலன்களைக் கொடுக்கும் தேவதைகளாகவே போற்றப்படுகின்றனர். கங்கை முதல் பல்வேறு நதிகளும் வேதம் முதலிய நூல்களால் ஸ்துதிக்கப் பெற்றுள்ளன. அவ்வழி காவேரி நதி வேத இதிஹாஸ புராணங்களில் பரம பவித்ரமான நதியாகப் புகழப்பெற்றுள்ளாள். மருத்வ்ருதா, ஸஹ்யஜா, காவேரி என்று பல்வேறு பெயர்கள் கொண்ட காவேரி அன்னை தமிழகத்தின் பெரும்பேறு என்றால் மிகையில்லை. பல்வேறு சிவாலயங்களையும் விஷ்ணு ஆலயங்களையும் தன்கரைகளில் பெற்று ஆலயங்களை மலர்களாகத் தொடுத்த மாலையைப் போல் காவேரி செல்லும் பாங்கே அழகு.

புராண சாரித்ர ரீதியாகக் காவேரியின் பெருமை சொல்லில் அடங்காது. **காமகோடி புரீம் காஞ்சீம் காவேரீம் ச ஸரித்வராம்** என்று பாகவதபுராணம் காமகோடி காஞ்சியையும் காவேரியையும் பிணைத்தே கூறுவது குறிப்பிடத்தக்கது. நம்முடைய ஸ்ரீமடத்திலும் துலாமாதம் காவேரியின் மஹிமைகளை ஆக்னேய புராணத்தில் உள்ள துலாக்காவேரி மாஹாத்ம்ய வடிவாகப் பாராயணம் செய்வது வழக்கமாக இருக்கிறது.

இத்தகைய பெருமை பெற்ற காவேரியில் இந்த ஹேமலம்ப ஆண்டு புஷ்கரம் நிகழ இருப்பது அனைவரின் பேறேயன்றி வேறில்லை. தீர்த்தராஜரான புஷ்கரர் தேவகுருவோடு காவேரியில் இணைந்து ஐஹிக ஆமுஷ்மிக பலன்களை அளிப்பதற்காக இயைந்து வருவது பஹுஜன்ம ஸுக்ருத பலனேயாகும்.

இத்தகைய காவேரிபுஷ்கரத்தையொட்டி அதற்கான விழாக் குழுவினர் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட இருப்பதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தோம். ஸ்ரீமஹாத்ரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீசந்த்ரமௌளீச்வர ஸ்வாமியின் பரம க்ருபாவிலாஸத்தால் பக்தர்கள் அனைவரும் காவேரியினால் பவித்ரர்களாகி ஐஹிக ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸுகளை அடையட்டும் என்றும் விழாக் குழுவினர் ஸகல மங்களங்களையும் அடையட்டும் என்றும் ஆசீர்வதிக்கிறோம்.

**நாராயணஸ்ம்ருதி:**